# <u>செய்திக்குறிப்பு</u>

அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் (ஐடிஐ) அரசு ஒதுக்கீடு இடங்களுக்கான மாணவர் சேர்க்கை மாவட்ட கலந்தாய்வு மூலம் நடைபெறும். ஐடிஐ பயிற்சி வகுப்புகள் ஆகஸ்ட் முதல் தொடங்கும். 8-ம் வகுப்பு தேர்ச்சி, 10-ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் 12-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் தமிழக அரசின் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் (Online மூலம்) விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களை அரசு இ-சேவை மையங்களிலிருந்தும் சமர்ப்பிக்கலாம். விண்ணப்பத்தில் எந்த மாவட்டத்தில் கலந்தாய்வில் பங்கேற்க விரும்புகிறீர்கள் என்ற விபரம் குறிப்பிடப்பட வேண்டும். விரும்பினால், பல மாவட்டங்களில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்கள் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை வரும் 15.06.2017-ந்தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் பயிற்சியில் சேரும் பயிற்சியாளர்களுக்கு,

<u>தமிழக அரசு மூலம்</u>

1) மாதந்தோறும் ரூ.500/- கல்வி உதவித்தொகை
2) இலவச மடிக்கணனி (Laptop)
3) இலவச மிதிவண்டி (Cycle)
4) இலவச சீருடை
5) இலவச பாடப்புத்தகங்கள்
6) இலவச காலணி
7) இலவச பஸ்பாஸ்
8) இலவச வரைபட கருவி ஆகியவைகள் வழங்கப்படும்.

கூடுதல் விபரங்களை இதே இணைய தளத்தில் பார்த்துக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பயிற்சி அலுவலர்,
அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், (மகளிர்)
வெண்ணமலை, கரூர் - 639 006

2/6/17